
www.padippakam.com

# தமிழீழத்தின் குரல்




வெளியீடு 1

தமிழீழ மக்களின் விடுதலையை வென்றெடுப்போம்!

படிப்பகம்

www.padippakam.com



ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான கர்ப்பிணிப்பெண் ஒருவர்.



அலை லையயல் சிங்கள அரசுக் கூலிப்படையினரால் அச்சுவேலியில் எரித்துநாசமாக்கப்பட்ட தமிழர் வியாபாரத் தலங்களின் ஒரு பகுதி.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் தோழர்

# உமா மகேஸ்வரன் (முகுந்தன்)

## அவர்களது வானொலி அறிக்கை

இப்பொழுது பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் சிங்கள இனவெறியன் லலித் அத்துலத் முதலியின் ஆலோசனையின் பேரில் சிறீலங்கா கூலிப்படைகள் பயங்கரமான வெறியாட்டத்தை நடத்தி வருகின்றன. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலே தங்களது அன்றாடக் கடமைகளை செய்துகொண்டிருக்கும் அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு பயங்கரவாதிகளைச் சுட்டுக் கொன்றுவிட்டோம் என்று கொக்கரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

சுன்னாகம், மல்லாகம், யாழ்ப்பாணம் முதலான இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களாலும் யாழ்ப்பாணம், வசாவிளான், மயிலிட்டி, அச்சுவேலி, பருத்தித்துறை, சுன்னாகம் முதலான இடங்களில் நடைபெற்ற கடையெரிப்புச் சம்பவங்களாலும் எமது மக்கள் அச்சமும் பீதியும் அடைந்திருக்கிறார்கள். வடபகுதியில் மக்களின் நாளாந்த வாழ்க்கை ஸ்தம்பித்துப்போய்

படிப்பகம்

www.padippakam.com



இருக்கின்றது. எந்த நேரம் என்ன நடக்கும் என்ற ஒரு திகில் சகல மக்களையும் பீடித்து இருக்கிறது.

எங்கள் மக்களை சுட்டுக் கொன்றுவிடுவதன் மூலமும் அவர்களது உடமைகளை நிர்மூலமாக்குவதன் மூலமும் தமிழீழ விடுதலைப் போராளிகளான எங்களையும், மக்களையும் பிரித்துவிடலாம் என்றோ எங்களது விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்றோ ஸ்ரீலங்கா அரசோ அல்லது அதன் தேசிய பாதுகாப்பு அமைச்சரான லலித் அத்துலத் முதலியோ கனவு காண்பவர்களாக இருந்தால் நிச்சயமாக அவர்களது கனவு பலிக்காது என்பது மட்டுமல்ல, இதன் காரணமாக வரலாற்றில் இடம்பெறத்தக்க அளவிற்கு அவர்கள் மோசமான விளைவுகளையும் சந்திக்கவேண்டி இருக்கும் என்பதையும் இப்போதே கூறிவைக்க விரும்புகின்றோம்.

இன்றைக்கு இனவெறியன் லலித் அத்துலத் முதலியால் வடபகுதியிலே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதம் ஏற்கனவே கிட்லர் போன்ற இனவெறியர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒன்றுதான். வரலாறு இவர்களுக்குக் கற்றுத்தந்த பாடத்தைத்தான் லலித் அத்துலத் முதலிக்கும் அவரை நியமித்த J. R. ஜெயவர்த்தனாவுக்கும் கற்றுத்தரும் என்பது நிச்சயமானது. எந்த ஒரு மக்களினதும் விடுதலை உணர்வை எந்த ஒரு சர்வாதிகாரியும் ஆயுதத்தால் அடக்கியதாக வரலாறு இல்லை. அந்த வரலாற்றை, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதன் மூலம் மாற்றி அமைக்கலாம் என்று லலித் அத்துலத் முதலியும் அவர் சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் பகற்கனவு காணுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



சிறீலங்கா கூலிப்படைகளின் துப்பாக்கிக் குண்டுகளுக்கும், அடாவடித் தனங்களுக்கும் நாங்கள் அஞ்சி அடிபணிந்து விடுவோமாக இருந்தால் எங்களுக்கும், எங்கள் எதிர்கால சந்ததிக்கும் என்றைக்குமே ஈடுசெய்ய முடியாத துரோகத்தைச் செய்தவர்களாகவே ஆவோம் என்பதையும் மனதிற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

எத்தனை இழப்புக்கள் நேர்ந்தாலும், எத்தனை சோதனைகள் வந்தாலும் அவை அத்தனையையும் ஒட்டுமொத்தமாக முறியடித்து எங்கள் தாய்த் தமிழ் ஈழத்தை மீட்டெடுப்பதற்கான ஆயுதப் போராட்டத்தில் குதிப்பதற்கு எமது மக்கள் கிளர்ந்தெழ வேண்டும். நாங்கள் சிறீலங்கா இராணுவத்தால் அநியாயமாகச் சுடப்பட்டு இறந்தோம் என்று இருக்காமல் எதிரியோடு நேருக்கு நேர் போரிட்டு எதிரியை அழிப்போம் அல்லது அந்தப் போரில் நாங்கள் இறப்போம் என்ற நிலைக்கு மக்கள் தயாராக வேண்டும். இலட்சிய உறுதியும், தியாக சிந்தையும்மிக்க மக்கள் ஆயுதம் ஏந்தி புரட்சி செய்யும்போது அவர்களை வெற்றி கொள்வது என்பது எந்தநாட்டுக் கூலிப்படைகளாலும் முடியாதஒரு காரியம் என்பது உலக வரலாறு.

ரஷ்யாவிலே ஜார் மன்னன் தன்னுடைய சர்வாதிகார ஆட்சியை ஏற்க மறுத்து கிளர்ச்சி செய்த இலட்சக்கணக்கான மக்களைத் தனது கூலிப்படைகளைக் கொண்டு ஈவிரக்கமின்றி கொன்றுகுவித்தான். ஆனால் லெனின் தலைமையில் விழிப்புணர்ச்சி பெற்ற ரஷ்ய மக்கள் புரட்சி செய்து அந்தக் கொடுங்கோலன் ஜாரை பதவியில் இருந்துதூக்கி எறிந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



உலக ஏகாதிபத்திய நாடான அமெரிக்கா வியட்னு மிலே தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக தெற்கு வியட்னும் சுரண்டல் அரசுக்கு உதவுவதாகக் கூறிக் கொண்டு வியட்னும் போரிலே இறங்கியது. லட்சக் கணக்கில் படை வீரர்களையும் கோடிக்கணக்கில் பணத்தையும் அந்தப் போராட்டத்துக்கு செலவிட்டது. ஆனுலும் ஒரு இலட்சியத்துக்காக போரிட்ட வியட்னும் மக்களையும் அவர்களது தோழர்களான வியட் காங் படை வீரர்களையும் அமெரிக்க கூலிப்படைகளால் இறுதி வரை வெல்லவே முடியவில்லை. இன்றைக்கு வடக்கு கிழக்குப் பகுதியிலே நடைபெறுவதுபோல்வியட்காங்படை வீரர்களைத் தேடுகின்ருேம் என்ற போர்வையில் திடீர் திடீர் என்று அமெரிக்க இராணுவம் தெற்கு வியட்னும் எல்லைக் கிராமங்களை முற்றுகையிடும். நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள். அவர்களது வீடுகள், வயல்கள் தீக்கிரையாக்கப்படும். ஆயிரக் கணக்கான இளைஞர்கள் கைது செய்யப்படுவார்கள். இவ்வளவுக்கு மத்தியிலும் வியட்காங் படைகள் மக்களின் உதவியோடு கண்ணி வெடிகளை வைத்தும், பதுங்கி இருந்து தாக்கியும் அமெரிக்க இராணுவதனை நிர்மூலமாக்கினுர்கள். குண்டு வெடிப்பும், துப்பாக்கி முழக்கமும், அகால மரணமும் வியட்னும் மக்களின் அன்ருட சம்பவங்களில் ஒன்ருகின.

வெடிமருந்துகளின் தாக்கத்தால் வியட்னும் நாடே கந்தக பூமியாக மாறியது. சண்டையில் இறந்துபோன இலட்சக்கணக்கான மக்களைவிட அதிகமான மக்கள் முடமாக்கப்பட்டார்கள். அனேகமான மக்கள் பார்வை இழந்தார்கள். பிறக்கும் குழந்தைகள் எல்லாம் அங்கவீனமாகப் பிறந்தன. இவ்வளவும் நடந்தும் பல வருடங்கள் சென்றும் வியட்னும் மக்களோ வியட்காங் படை

படிப்பகம்

www.padippakam.com



களோ அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு அஞ்சி அடி பணிந்து விடவில்லை. மாறாக அமெரிக்க கூலிப் படைக ளின் எல்லா நிலைகளையும் அதிரடித் தாக்குதல்களால் தடு மாற வைத்தார்கள். இறுதியில் உலகப் பெரும் வல்லர சான அமெரிக்கா தனது தோல்வியை ஒப்புக்கொண்டு மூக்குடைபட்டு வியட்னாமில் இருந்து திரும்ப வேண்டிய தாயிற்று.

இதே போல எத்தனையோ உலகநாடுகளில் எல்லாம் மக்கள் ஒன்றுபட்டு புரட்சிசெய்து ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்து விடப்படும் அரச பயங்கரவாதங்களை எல் லாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளார்கள். இவற்றை எல்லாம் முன்மாதிரியாகக் கொண்டு எமது மக்களும் சுதந்திரத் தமிழ் ஈழத்தை நிறுவுவதற்காக ஒரு போராட் டத்திலே குதிக்க வேண்டும். அதற்காக எந்தத் தியாகத் தையும் செய்வதற்கும் சித்தமாக இருக்கவும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

நெருக்கடி மிகுந்த இந்த நேரத்திலே பல்வேறு குழுக் களாகப் பிரிந்து நின்று போராடிவரும் எமக்கு தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கும் சில விடயங்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

இன்றைக்கு தமிழீழத்திலே நடைபெற்றுக் கொண்டி ருப்பது பிரகடனப்படுத்தப்படாத ஒரு யுத்தமாகும். இந்த யுத்தம் சிறீலங்கா கூலிப்படைகளுக்கும் தமிழீழ விடுத லைப் போராளிகளுக்கும் இடையிலான நிலைமாறி ஒன்றும் அறியாத அப்பாவி மக்களும் அநியாயமாக சுட்டுக் கொல் லப்படும் ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. சிறீலங்காவின்

படிப்பகம்

www.padippakam.com



தேசிய பாதுகாப்பு அமைச்சர் திட்டமிட்ட அடிப்படையில் அப்பாவிமக்களை பெருமளவில் ஒழித்துக் கட்டுவதன் மூலம் மக்களுக்கு விடுதலைப் போராளிகள்மீது வெறுப்பை ஏற்படுத்தி எமது போராட்டத்தை நசுக்கி விடுவதற்கு கனவு கண்டு கொண்டு இருக்கிறார். அவரது கனவை தகர்த்தெறிவதற்கு நாம் எல்லோரும் அதாவது எல்லா இயக்கங்களும் மிக நிதானத்தோடும் விழிப்புணர்வோடும் செயல்படவேண்டிய ஒரு காலகட்டத்தில் இருக்கின்றோம். அத்துலத் முதலியின் இத்தகைய சூழ்ச்சிகளுக்கு நாங்கள் செய்யும் எந்த ஒரு சம்பவமும் துணையாக அமையாதவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். எங்கள் கைகளில் உள்ள ஆயுதங்கள் எதிரியை அழிப்பதற்கு மட்டுமல்ல, எங்கள் மக்களைப் பாதுகாப்பதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை நாம் அனைவரும் தெளிவாக உணரவேண்டும். நாம் இப்போது முன் யோசனை இன்றியும், பழிவாங்கும் உணர்ச்சியினாலும் செய்யும் எந்த சம்பவங்களும் எமது மக்களுக்கு பெருத்த அழிவையே தேடித்தரும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**இந்த நேரத்தில் எமது மக்களை சிங்கள அரச பயங்கரவாதத்தில் இருந்து காப்பாற்ற வேண்டியது எங்களுடைய பொறுப்பாகும். இதற்கு முதலில் எங்களுக்கிடையே இருக்கும் பழைய கோபதாபங்கள் - பிணக்குகள் இவைகளையெல்லாம் மறந்து எமது இனத்தின் நன்மை கருதி நாம் எல்லோரும் ஒரு பொது வேலைத் திட்டத்தின்கீழ் ஒரே கூட்டுக்குள் இணையவேண்டியது அவசியமாகும். இதை இன்றைய காலகட்டத்தில் செய்யத் தவறுவோ**

படிப்பகம்

www.padippakam.com



மாக இருந்தால் எங்களுடைய விடுதலைப் போராட்டப் பாதையிலே பல ஆண்டுகளுக்கு பின்தள்ளப்படுவோம் என்பதோடு எங்களுடைய மக்களின் வெறுப்புணர்ச்சிக்கும் ஆளாக வேண்டியும் இருக்கும் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்றைய எமது செயற்பாடுகள் யாவும் மக்களை மறந்த போராட்டங்களாக விளங்கக் கூடாது. இதனைக் கருத்திற்கொண்டு கூடுமானவரை எல்லா இயக்கங்களும் ஒன்று சேர்ந்து பொது மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு வேலைத் திட்டங்களை அமைத்து எதிரியை முறியடிப்பதற்கு முன்வர வேண்டும். இதற்கு எமது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்றைக்குமே தயாராக உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

“தமிழீழ விடுதலை என்பது அலங்காரமான மேடைப் பேச்சுக்களினுலோ — காகித ஒப்பந்தங்களினுலோ சுய விளம்பரத்திற்காகச் செய்யப்படுகின்ற வீரதீரச் சாகசங்களினுலோ வந்து விடாது—உண்மையான தியாக மனப்பான்மையோடும் தீர்க்க தரிசனத்தோடும்—மக்களை அரசியல் மயப்படுத்தி ஆயுதமேந்த வைத்து நடத்தப்படுகின்ற மக்கள் புரட்சியினுல் மட்டுமே தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முடியும்”

படிப்பகம்

www.padippakam.com

உ

# தடைகளைத் தாண்டி ஒலிக்கின்றது!
# தமிழீழத்தின் குரல்

*ஸ்ரீலங்கா அரசின் இடைறுகளையும் தடைகளையும் வெற்றிகரமாக முறியடித்து—தமிழீழ மக்களின் விடுதலைக் குரலாக—தமிழீழ வரலாற்றையும் செய்திகளையும்—புரட்சிக் கருத்துக்களையும் தாங்கி 4 அலைவரிசைகளில் வான் அலைகளில் தவழ்ந்து வருகிறது! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகார பூர்வ ஒலிபரப்பான தமிழீழத்தின் குரல் —*

## ஒலிப்பரப்பு அலைவரிசைகள்

| | |
|---|---|
| *ஒலிபரப்பு* I | 90M-3500KHZ<br>41M-7300KHZ |
| *ஒலிபரப்பு* II | 41M-7080KHZ |
| *ஒலிபரப்பு* III | 41M-7120 KHZ |

*குறிப்பு: ஏதாவது ஒரு அலைவரிசையில் எமது ஒலிபரப்புத் தடைப்பட்டால் உடனடியாக உங்கள் வானொலி மீட்டரை எமது அடுத்த அலைவரிசைக்கு சிறிது நகர்த்தி எமது ஒலிபரப்பை தெளிவாகக் கேட்கலாம்.*

## நிகழ்ச்சி நிரல்

தினசரி மாலை 4-00—4-30 மணிவரை தமிழ் ஒலிபரப்பு

சனி, ஞாயிறு காலை 7-00—8-00 மணிவரை தமிழ் ஒலிபரப்பு

8-00—8-30 மணிவரை ஆங்கில ஒலிபரப்பு

8-30—9-00 மணிவரை சிங்கள ஒலிபரப்பு

சனி, ஞாயிறு மாலை 4-00—5-00 மணிவரை தமிழ் ஒலிபரப்பு

5-00—5-30 மணிவரை ஆங்கில ஒலிபரப்பு

5-30—6-00 மணிவரை சிங்கள ஒலிபரப்பு

படிப்பகம்

www.padippakam.com





சுன்னாகத்தில் ஆகாயப்படையினரின் தாக்குதலுக்குப் பலியாகி யாழ்ப்பாண அரசு மருத்துவமனையில் வைக்கப் பட்டிருந்த தமிழரின் சடலங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

**அன்பளிப்பு**

தமிழகத்தில் 50 காசு
தமிழீழத்தில் 1 ரூபா

எங்கள் மக்களே எம்மைப் புரட்சியாளர்களாக ஆக்கியுள்ளார்கள். தமிழீழ மக்களது முழுமையான விடுதலையே எங்களது தலையாய நோக்கமாகும். பரந்துபட்ட தமிழீழ மக்களின் ஆயுதம் ஏந்திய புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே தமிழீழ விடுதலையை அடைய முடியும். ஒன்று திரண்ட மக்கள் ஆதரவுடன் விரைவில் தமிழீழத்தை வென்றெடுப்போம்.

**உமாமகேசுவரன் (முகுந்தன்)**

வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்புப் பிரிவு,
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.

படிப்பகம்